# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2018 கடகம் - மடங்கல் (10-8-1987) 85 காசுகள் (இதழ் எண்: 89)


# இராசீவ் காந்தி - இராமச்சந்திரன் சூழ்ச்சிகள், தமிழினத்தின் நிலையான அடிமைக்கு அடிகோலி விட்டன!

# பல்லாயிரக் கணக்கான தமிழர்களின் பிணக்குழிகளின் மேல், இராசீவ் - செயவர்த்தன ஆரிய - இனநல - ஒப்பந்தம்!

## போராளிகளின் முயற்சி அடியோடு சாய்க்கப்பட்டது! தமிழகம் சாவுவீடு போல் ஆகிவிட்டது!

தமிழீழம் இப்பொழுதைக்குக் கனவாகிப் போனது; இனி, அடுத்த முயற்சி தமிழகத்தைத் தனி நாடாக ஆக்குகின்ற முயற்சிதான்!

தமிழர் ஒவ்வொருவரும் பிரபாகரனையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தால் என்னாவது? தமிழக இளைஞர்கள்தாம் இனி எதிர்காலத் தமிழ்ஆட்சியைச் சமைத்தெடுக்க வேண்டும்!

## இன்றிலிருந்து இன்னும் இருபதாண்டிற்குள்ளேனும் தனித்தமிழகத்தை மீட்டெடுப்போம்

தமிழ்த் தலைவர்கள் இனியேனும் மன இறுக்கத்தையும், தந்நல உணர்வையும் தவிர்த்து' அனைவரும் ஒன்றுபட்டு இயங்கி, உண்மையான இன விடிவுக்கான ஆக்கம் கருதவேண்டும்!

எழுக! இணைக! முனைக! முடிக்க!

# எங்கள் கருத்துகள்!

## நாய்கள், நரிகள் சூழ்ச்சியில் புலிகளும் பலியாயினவே!

அறிவு நலஞ் சார்ந்த ''தமிழினத்தின் விடி வெள்ளி'' பாவலரேறு ஐயா அவர்களுக்கு வணக்கம்!

கடந்த சில நாள்களாகத் தென்மொழி, தமிழ்நிலம் இதழ்கள் காணாது ஏக்கமுற்றேம்! ஆனால் அதனிலுங் கொடுஞ் செயல்- இப்போது இராசீவ்—செயவர்த்தன-எம்.சி.ஆர் நடித்த (நாடக) ஒப்பந்தம் இறுதி வடிவம் பெற்றுத் தமிழினத்தைக் காலடியில் போட்டு நசுக்கித் தேய்த்த காட்சி 29-7-87-இல் நிகழ்ந்தது.

இதுபற்றி முன்னரே ''தமிழ் நிலம்'' அறிக்கைகள் புலப்படுத்தியும், இழிந்த நாய்களும் நரிகளும் நடத்திய சூழ்ச்சியில் புலிகளும் பலியாயினவே என வருந்துகிறேன்.

தாங்கள் ''வருமுன்னர் காக்கும்'' முயற்சியாய் இடித்துரைத்தும் கேளா திருந்தனரே என்பதே வருத்தம். அமிர்தலிங்கம் போன்றோர் மட்டும் பலியாயினர் என்று ஏமாறியிருந்தோம். போராளிகள் நடவடிக்கைகள் மாறாதிருப்பின் ஈழத்தமிழினம் முற்றாக அழிவுறும் என்பது மட்டும் உறுதியாய்த் தெரிகிறது. கருவிகளைக் கீழே போடுவது எனும் தீர்மானத்தில் மட்டுமே அரசுகள் குறியாகவிருக்கும்!

இறுதியாக,

காந்தியைப் பார்ப்பன இன வெறியும், இந்திராவைச் சீக்கிய இனவுணர்வும், இராசீவைச் சிங்கள இனவுணர்வும தட்டிப்பார்த்தன. ஆனால் தமிழின உணர்வு மட்டும் மிளாததுயில் கொள்கிறது!—

ஆலை- 29 ஓர் இழவு நாளே!

அன்பன், —க. கதிர்குன்றன், பழனி.

## கொள்கை வெற்றி பெறுவது திண்ணம்!

ஐயா, உலகத்தமிழின முன்னேற்றக் கழகத்தவரே! தங்கத் தமிழ்பாடும் பெருஞ்சித்திரனாரே! தனித்தமிழ் காக்கும் ஒரு சித்திரனாரே! அழியும் தமிழை ஆர்ப்பரித்துக் காக்கின்ற அரிமாத்தமிழரே, என் உடலெல்லாம் நீங்களே நிறைந்திருக்கின்றீர்கள்.

கலப்பு மொழி பேசிக் கரவாக ஏய்க்கின்றனர்கள், மக்களை நாளும் மமதையாளர்கள். தாங்கள் எழுத்திலும், பேச்சிலும் எச்சரிக்கை செய்கின்றீரே, அரசியலை முதலாக வைத்துப் பிழைப்பு நடத்துகின்றனர் என்றே. அவர்களுக்கு இதெல்லாம் எங்கே கேட்கப் போகின்றது? இவர்களது கொட்டம் எத்தனை நாளைக்கு? என்றைக் காவது தமிழ் மக்கள் ஒரு நாள் விழித்து எழுவார்கள்! அன்றைக்கே இவர்களது அரசியல் அடிபட்டுப் போகும். முறையான அரசியலே முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்; அனைத்து உரிமைகளும் தமிழ் மக்கள் பெறவேண்டும் என்கிறீர்கள். மாற்றான் இடத்தில் நம்மக்கள் அடிமையாக இருக்கலாமா, என்கிறீர்கள். இவர்களைக் காப்பதற்கு நாம் என்ன விளைவுகளையும் தருவோம் என் கிறீர்கள். ஆகவே தங்களுடைய கொள்கை வெற்றி பெறுவது திண்ணம். இதுதான் அனைத்துத் தமிழ் மக்களுடைய எண்ணம். ஆகவே நாம் திருத்த வேண்டியிருக்கின்றது இன்னும்.

பத்து ஆண்டுக் காலமாக நான் தி.மு.க. வில் செயல்பட்டு வந்தேன், தீவிரமாய்! இவற்றை எனக்கு எடுத்துச்சொல்லி இவ்வியக்கத்திற்கு மாற்றியமைத்த பெருமை அண்ணன் தென்னவன் அவர்களைச் சாரும். நான் கலைஞர் மேல் உயிராக இருந்தேன். திருவொற்றியூரில் தங்களின் அரசியல் சொற்பொழிவை ஆவலுடன் கேட்டேன். அன்றைக்கே தி.மு.க. வைத் துறந்தேன். கடந்த இரண்டாண்டாகத் தென்மொழி படித்தேன். இதுதான் உண்மையான அரசியல் என்று இந்த முடிவு நான் எடுத்தேன். வணக்கம் ஐயா! தங்களின் நண்பன்,

—வெ. புகழேந்தி; சென்னை 19.

## நெஞ்சுரத்தைப் போற்றுகின்றேன்!

அன்புடன் ஆசிரியர் அவர்களுக்கு, க. குப்புசாமி (உ. எ-442) வரைவது. தமிழ் நிலம் தொடர்ந்து பெறுகிறேன். பணத்துக்காகவும் பதவிக்காகவும் தலை தரையில் தேயத் தில்லியைத் தொழுது எழும் வஞ்சகர்கள் நடுவில் துணிச்சலுடன் தில்லி வல்லரசியத்திற்கு வெடி வைக்கும் ஆற்றலையும், குட்டி, தேவதைகள் பாராளுமன்றத்தில் உள்ளதைச் சுட்டிக் காட்டும் நெஞ்சுரத்தையும் நெஞ்சாரப் போற்றுகிறேன், அய்யா! நான் புலவர் அருளி அய்யாவின் நிகழ்ச்சியின் போது, இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக இருக்கும், ஆறு மாத உறுப்பினர் கட்டணம், கட்டினேன்.... தமிழ்நிலத்திற்கு உறுப்பினர்களைச் சேர்த்து அனுப்பித் தமிழ் நிலம் தமிழ் நிலமெல்லாம் பரவுதற்கு என்னால் இயன்ற முயற்சிகளைச் செய்வேன் என்று பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். க. குப்புசாமி, புதுச்சேரி.

## முகத்திரையைக் கிழியுங்கள்!

பெருமதிப்பிற்குரிய அய்யா! வணக்கம். திசம்பர் திங்களில் சென்னையில் நடைபெற்ற உ.த.மு.க. கருத்தரங்கிற்கு நான் வர முடியவில்லை. அழைப்பிதழ் அனுப்பியமைக்கு நன்றி தெரிவிக்கிறேன். யான் கலந்து கொள்ள இயலாது போனமையைப் பொறுத்தருள வேண்டுகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் வழக்கில் உள்ள தமிழ்ச் சொற்கள் பல தமிழ் அகராதிகளில் இல்லை. அத்தகு சொற்களைத் தொகுத்து வருகிறேன். முந்நூறுக்கும் மிகுதியான சொற்கள் சேர்ந்துள்ளன. திரு. அருளியார் அனுப்பிவைக்கச் சொன்னார்கள். சில நாள்களில் அவருக்கு அனுப்பி வைப்பேன்.

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)

ஓய்ந்திடல் இல்லை, என் உள்ளமும், உணர்வும், உயிர்ச்செறிவும்
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும் தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்; எனவே சலிப்பிலனாய்,
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன், உரைப்பேன், மக்களுக்கே!


# தமிழ் நிலம்

**உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு.**

சிறப்பாசிரியர்
**பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

தி. பி. 2018 கடகம் - மடங்கல் (10-8-1987) இதழ் எண்-89



சிறப்பாசிரியர்:
பாவலரேறு பெருஞ்சித்திரனார்

ஆசிரியர்:
தென்மொழி மா. பூங்குன்றன்.

துணையாசிரியர்கள்:
தென்மொழி. கல்லை. அருட்செல்வன்
தென்மொழி. மா. பொழிலன்

கருத்தாளர் குழு:
பறம்பை அறிவன்,
தென்னவன் கோ,
தென்மொழி. மா. சித்திரச் செந்தாழை ஆறிறைவன்
தென்மொழி. ப. முருகவேள்,
குழந்தை. ஈகவரசன்,
வெங்காலூர். பொற்செழியன்,
தென்மொழி துரை. தென்னவன்,
மா. செ. தமிழ்மணி,
புலவர்குமர. தன்னொளியன்,
கி. குணத்தொகையன்.

கட்டுரையாசிரியர் குழு:
பாவலர். கடவூர் மணிமாறன்,
பாவலர். இளஞ்சித்திரன்,
பாவலர். ப. எழில்வாணன்,
பாவலர். கொ. செ. சின்னப்பனார்,
தமிழ்ச்சுடர் மணிமுத்து,

உதவியாளர் குழு:
அழ. இளமுருகன்,
வியனரசு,
வே. கோ. வெற்றிச்செல்வன்,
நெடியோன்.

அச்சீட்டாளர்:
தாமரை பெருஞ்சித்திரனார்.
தென்மொழி மின் அச்சகம்.

கழக வேளிர்:
தென்மொழி. இரா. இளம்பிறைச் செல்வன் (பாலகங்காதரன்)

கழக அருளாளர்:
தென்மொழி. நா. இளமாறன்.

கழக அருட்கொடையாளர்:
தென்மொழி. ந. முத்துக்குமரன்,
தென்மொழி. மா. ஆறுமுகம்,
தென்மொழி. த. அரிமாவளங்கோ,
எசு. ஆர். எசு. பிரான்சிசு,
தென்மொழி. ஆறிறைவன்.



கட்டணம்:

| | உள்நாடு | வெளிநாடு வான் | வெளிநாடு கடல் |
|---|---|---|---|
| தனியிதழ் | 0-85 | 6-00 | 4-00 |
| ஆண்டுக் கட்டணம் | 44-00 | 320-00 | 220-00 |
| அரையாண்டுக் கட்டணம் | 22-00 | 160-00 | 110-00 |
| வாணாள் உரு. | 750 | 5000 | 3500 |



தொடர்பு முகவரி:
**தமிழ்நிலம்** சென்னை-600005.
**தொலைபேசி:** 847829


## விடுதலைப் போராளிகளுக்கு ஒரு வேண்டுகோள்!

மக்கள் போராட்டங்கள் அனைத்திலும் நாட்டு விடுதலைப் போராட்டமே முதலிடம் பெறுவது. அப் போராட்டம் உரிமை மீட்பின் அடிப்படையில் செய்யப் பெறுவது. இதற்கு உணர்வு, அறிவு, செயல் மூன்றும் நிறைவுடனும், தொடர்ந்தும், துணிவுடனும் இயங்குதல் வேண்டும்.

விடுதலை உரிமைப் போராட்டம் தேவை என்று உணர்வது முதல் படிநிலை; அதற்குரிய வீரர்களை ஒருங்கு திரட்டுவது இரண்டாம் படிநிலை; அவர்களை ஓர் இயக்கமாகக் கட்டியமைத்துப் பயிற்சி செய்விப்பது மூன்றாம் படிநிலை; அவர்களைக் கொண்டு நேரடியாகவோ கொரில்லா முறையிலோ போராடுவது நான்காம் படிநிலை; இறுதியாக அப்போராட்டத்தில் வென்றெடுப்பது ஐந்தாம் படிநிலை.

இவ் வைந்து படிநிலைகளிலும் ஒன்றன் பின் ஒன்றாகக் காலடி வைத்து முன்னேறுவதற்கு, அப்போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் தலைவரோ ஒரு குழுவோ எவ்வளவு பாடுபட வேண்டியிருக்கும் என்பது நேரிடையாக உணரவேண்டிய பாடம். வெளியிலிருந்து கொண்டு எவ்வளவும் பேசலாம்; திட்டமிடலாம். ஆனால் களத்தில் இறங்கிப் பார்க்கும் பொழுதுதான், இதன் இடர்ப்பாடுகளும் இழப்புகளும் ஏதங்களும் (அபாயங்களும்) தெரியவரும்.

மேலும், முன் கூறிய ஒரு போராட்டத்தின் ஐந்து படிநிலைகளிலும் ஒன்றன் பின் ஒன்றாகக் கடந்து செல்கையில் எத்துணை உழைப்பும், எவ்வளவு பொருள் செலவும் அறிவுக் கூர்மையும், செயல்திறமும் ஆளுமையும் தேவை என்பதை இதில் ஈடுபடுபவரே உண்மையாக அறிய முடியும். இன்னும், ஒவ்வொரு படிநிலையிலும் எவ்வளவு அகப்புறப் போராட்டங்களுக்கும், சூழ்ச்சி இரண்டகங்களுக்கும் எதிர்ப்புகளுக்கும் ஈடு கொடுக்க வேண்டியிருக்கும் என்பதையும் பட்டறிவால் அன்றிப் படிப்பறிவாலும் உணர முடியாது.

மொத்தத்தில் இன, நில உரிமைப் போராட்டங்களைத் தொடங்குவதும், அவற்றை வழிநடத்திச் செல்வதும், இவ்வுலகில் செயற்கரிய செயல்களாகும். இச் செயல்களைக் குறைத்து மதிப்பிடுவாரும்

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

# இந்திய அரசியல் அகராதி!

- குன்றன் -

**தலைமையமைச்சர்:** (அ) இந்தியாவை ஆளுவதற்கென்றே உள்ள ஒரே இனம், ஒரே மொழியில் பிறந்த ஒருவர்.

(ஆ) - இந்தியாவை ஆளுவதற்கென்ற முடிவெடுக்கப் பட்டுள்ள மரபுக் குடும்பத்தில் பிறந்த ஒருவர்.

(இ) - இடையில் நேரும் அரசியல் தவறுதல்களால் குறுகிய காலங்களில் வேறு சிலர் தப்பித்தவறிப் பதவியைப் பிடித்து விட்டாலும் தூக்கியெறிந்து விட்டு ஆட்சியேறும் மன்னர் மரபினர்.

(ஈ) - தமக்கு நெருக்கடி நிலை ஏற்பட்டாலும் நாட்டிற்கே ஏற்பட்டதாகக் கருதும் பொது மனத்தினர்.

(உ) - நாட்டின் நலனைக் கருதி வெளிநாட்டு வைப்பகங்களிலும் பணம் சேர்த்துவைப்பவர்.

(ஊ) - எந்த நேரத்திலும் இந்தியக்குடிமகன் யாரும் தாக்கக் கூடும் என்று எதிர்நோக்கித் தக்கக் காவலுடனும் மார்புக் கவசத்துடனும் தம்மை இரும்பு உறைக்குள் மறைத்துக் கொண்டிருப்பவர்.

(எ) - தம்மைக் காத்துக் கொள்வதற்கென்றே ஒரு பெரிய துறையையே அமைத்து அதில் பலருக்கும் வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருப்பவர்.

(ஐ) - இந்தியக்குடியரசின் அனைத்ததிகாரி.

**குடியரசுத்தலைவர்** (அ) இந்தியத்தலைமையமைச்சர் பரிந்துரையின் பேரில் தேர்ந்தெடுக்கப் பட்டு, அவர் நீட்டிய இடங்களிலெல்லாம் கையொப்பம் போடும்-அதிகாரம் மிகுந்த-தற்சிந்தனை யிருக்கக் கூடாத-முதல் இந்தியக் குடிமகன்.

(ஆ) - நாட்டில் நடத்தப் பெறும் விழாக்களில் கலந்து கொள்ளவும், உள்நாட்டு, வெளிநாட்டு விருந்தினர்களை அழைத்து வரவேற்கவும் உள்ள வரவேற்பு ஊழியர்.

(இ) - சட்டங்கள் தமக்கு அதிகாரங்கள் இருப்பதாகப் பறை சாற்றினாலும் அதைக் கண்டு கொள்ளாமல் நடந்துகொள்ளும் பெருந்தன்மை மாந்தர்.

(ஈ) - தலைமையமைச்சரைப் பகைத்துக் கொள்ளும் மாநில அரசுகளைத் தக்கநேரத்தில் ஒழித்துத் தலைமையமைச்சரின் ஆட்சியை நிறுவும் அரசு முகவர்.

**ஆளுநர்** (அ) மாநில அரசின் குடியரசுத்தலைவர்.

(ஆ) - தமக்குள்ள அதிகாரங்களைக் கட்சிகளுக்கு விற்று விட்டு, உறங்கி, ஓய்வெடுக்கும் நடுவணரசு முகவர்.

(இ) - தாம் பொறுப்பேற்கும் மாநிலத்தின் மொழி முதற்கொண்டு எதற்கும் தொடர்பு இருக்கக் கூடாதவர்.

(ஈ) - மாநில அரசு விழாக்களை அழகுப்படுத்தும் பொம்மை.

(உ) - நெருக்கடிக் காலங்களிலும், மாநில அரசுக் கவிழ்ப்புக் காலங்களிலும் தாம் ஒருவர் இருப்பதைக் வெளிக்காட்டிக் கொள்பவர்.

(ஊ) - முதலமைச்சர் இயங்க முடியாமல் போகிறபோதும், மக்களின், எதிர்ப்பை நேரடியாகத் தாங்கிக் கொள்ளாத போதும், அரசு நடவடிக்கைகளை அறிவிக்கும் ஒலி பெருக்கி.

**முதலமைச்சர்** (அ) ஏதோ ஒரு வகையில் மக்களின் விளம்பரம் பெற்ற தனிமாந்தர், சமயம் பார்த்துத் திடீரென்று மக்களின் மேலும் நாட்டின் மேலும் அக்கறை வந்து விட்டதாகக் கூறி, அரசியல் கட்சி ஒன்று தொடங்குவதன் மூலம், தம்மை மாநில முதல் அதிகாரியாக்கிக் கொள்ளுபவர்.

(ஆ) - கவர்ச்சியான ஆனால் உணர்வற்ற பேச்சற்ற பொருளாக இருந்தாலும் போதும் என்ற தகுதியில் நிறுவப்பட்ட பதவியாளர்.

(இ) - மக்களை விழியப்படைய வைப்பதினும் மழுங்கடித்துக் கறந்து பதவியை முதல் ஊதியமாக பெறுபவர்.

(ஈ) - தேர்ந்தெடுத்த தம் மக்களிடம் நம்பிக்கையைப் பெறுவதினும் ஆட்சியைக் கவிழ்க்கும் அதிகாரமுடைய நடுவணரசிடம் நம்பிக்கை பெறுவதை நோக்கமாக உடையவர்.

---

## மன்பதை கொதித்திலதே!

தேனென மானெனக் கொஞ்சிய பிஞ்சுகள்
செத்துக் கிடந்தனரே — அவர்
தீப்பொறி யோடெழும் குண்டடி பட்டுடல்
பொத்துக் கிடந்தனரே!

மீனெனப் போற்றிய பெண்களின் கண்களும்
குத்திக் கிடந்தனவே — அவர்
மேனிகள் பூமிதி பட்டதை யொத்துடல்
வெட்டிக் கிடந்தனவே!

ஈனராய்ப் போனவர் நச்சர வத்தினும்
கொட்டிக் களித்தனரே — தமிழ்
ஈழமென் தாயகம் என்றவர் தம்முடல்
இற்று மடிந்தனரே!

மானமும் போனது மண்பறி போனது
மற்றினி எது பெரிதோ? — உடன்
வாழ்பவர் ஓரினம் என்றெழக் கண்டிலம்
மன்பதை கொதித்திலதே!

- அருள். செல்லத்துரை.

Scanned with CamScanner

சிதறிச் சிதறி ஓடும் சிந்தனையில்...

# தமிழ்நாடு- உள்ளும் புறமும் !

- பறம்பை அறிவன்

O 'தமிழ் நாட்டின் உள்ளம் நாட்டுப் புறத்தில் உள்ளது.' என்று கூறிக் கொண்டே, நகர்ப்புறங்களைச் சுவடித்துக் கொண்டிருக்கிறோம்! 'மன நலம் மன்னுயிர்க்கு ஆக்கம்!' என்ற குறளை ஓதிக் கொண்டே புறவழகைப் பேணிக் கொண்டிருக்கிறோம்!

O தொலைக் காட்சிப் பெட்டியுள்ள விடுகளை எட்டிப் பார்க்கும் எளிய குடும்பத்துப் பிள்ளைகளை விரட்டியடிக் கின்றனர்! பகட்டுகள் படைதிரட்டி வந்து கொண்டிருக்கின்றன. ஆனால், நாம் எளியவர்களிடம் சிக்கனம், சேமிப்புப் பற்றி வாய்பிளந்து பேசித் தள்ளிக் கொண்டிருக்கிறோம்!

இப்படி முரண்களை முட்டி மோதி எழுகின்ற அமைப்பில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்ற தெளிவு முதலில் நமக்கு வேண்டும்! அதன்பிறகு தீர்வுக்கான போராட்டத்தில் இறங்குதல் வேண்டும்!

தமிழ் நாட்டின் உள்ளேயும், புறத்தேயும் நிகழ்வன கண்டு பட்டுத் தெறிக்கும் எண்ணங்களை எழுதுங்கள். அவை, நமக்கெழுச்சியும் தன்னம்பிக்கையும் தரும்!

O தமிழ்நாட்டைத் தனிநோக்கில் பார்த்துச்செய்தி வெளியிடும் நாளிதழைப் பார்க்கின்றோம். ஆனால், அதன் நோக்கம், 'இந்தியச் சிறைக்குள்' உள்ள ஏந்துகள், உணவுகள், காப்புகள் பற்றி மக்களிடம் பெருமையடித்துக் கொள்வதே ஆகும்!

O பொருளியல் வல்லுநர் கூடி முடிவெடுத்தாலும், அரசியல்காரர்கள் மாநாடு கூட்டினாலும், அடிப்படை மாறுதல் பற்றிப் பேசுவதை வேண்டுமென்றே கைவிட்டு விடுகின்றனர். புரட்சிக்காரர்கள் அப்படிப் பேசினாலும், அமைப்பு வடிவம் உறுதிப்படாமல், 'கருத்து' மோதலில் கலகலத்துப் போவதைக் காண்கின்றோம்!

O திருச்சி பிசப் ஈபர் கல்லூரி வேதியல் பேராசிரியர் என். பாலசுப்பிரமணியன், தனிப்பட — வேதியல் (Photo - Chemsitry) பற்றி ஆய்வு செய்து பண்டாரகர் பட்டம் பெற்றுள்ளார். இப் பட்டம் சென்னைப் பல்கலைக் கழகம் தந்துள்ளது.

தமிழ் நாட்டில் இது போன்ற பட்டங்கள் தமிழாய்ந்த அறிஞர் பெறுதல், மகிழ்ச்சி தருவதாகும்!

O இன்னமும் நாம், சென்னையை மதராசு (MADRAS) என்றே எழுதிக் கொண்டும் சொல்லிக் கொண்டும் -வருகிறோம்! சென்னை இடம்பெறவும், மதராசு மாயவும் வேண்டும். தமிழ் நாடு நினைத்துப் பார்க்குமா?

O இரும்புச் சாரமுள்ள உப்பு இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏராளம் கிடைக்கிறது. ஆனால், அப்பகுதி மக்கள் இரும்புச் சாரமற்ற உணவு கொள்ளாமையால் 'சோகை' நோய் அடைகின்றனர். சோகை தீர இயற்கை வழி வைத்துள்ளது. எடுக்கவும், கொடுக்கவுமான உரிமையும் அதிகாரமும் நடுவண், மாநில அரசுகளிடம் உள்ளன.

உலக நிறுவன உதவிபெற்று, இந்திய அரசு உதவிபெற்றுச் செயல்படத் திட்டமிட அதிகாரிகள்

(தொடர்ச்சி 9 ஆம் பக்கம்)

# நாம் என்ன ஒட்டாண்டிகளா?

குடிக்கவோ, வேளாண்மை செய்யவோ — தண்ணீருக்கு வழி செய்யவோ முடியாத இந்த இந்திய ஒற்றுமை தேவைதானா?

குடிக்கத் தண்ணீருக்கு வழியமைத்துத் தராத நிலையில் நாம் மட்டும் ஏன் எந்த ஊதியமும் இல்லாமல் ஏமாளிகளாய், இந்திய அரசுக்கு,—

... கன்னெய் (பெட்ரோல்) கொடுக்க வேண்டும்?
... அரிசி கொடுக்க வேண்டும்?
... நில வரி செலுத்த வேண்டும்?
... வருமான வரி செலுத்த வேண்டும்?
... விற்பனை வரி செலுத்த வேண்டும்?
... பொழுதுபோக்கு வரி செலுத்த வேண்டும்?
... தொழில் வரி செலுத்த வேண்டும்?
... மின்சாரம் கொடுக்க வேண்டும்?
... தேயிலை கொடுக்க வேண்டும்?
... தொய்வம் (ரப்பர்) கொடுக்க வேண்டும்?
... விளைச்சல் பொருள்கள் கொடுக்க வேண்டும்?
... கனிவளங்களைக் கொடுக்க வேண்டும்?
— உருவாக்கப் பொருள்களைக் கொடுக்க வேண்டும்?
— மாந்த உழைப்பைக் கொடுக்க வேண்டும்?
— தமிழக நிலத்தை நீர் வார்த்துக் கொடுக்க வேண்டும்?

— இன்றைக்குத் தமிழகத்தில் உள்ள நீரும், விளை பொருள்களும், கனிவளமும் தமிழர்களுக்காக மட்டும் என்றால், தமிழர்கள் மிகமிக நிறைவாக வாழலாமே! எச்சமும் நிறைய இருக்குமே!

— ஏன் நம்மை ஆளும் இந்திய அரசும், முதலாளிகளும், பன்னாட்டு முதலாளிகளும், தமிழ்த் தேசிய முதலாளிகளும். சுரண்டிக் கொழுக்க, நாம் உழைத்துச் சாகவேண்டும்? ஒட்டாண்டிகளாய் இருக்க வேண்டும்?
— சிந்திப்பீர் தமிழர்களே!

—விடுதலை வேட்பன்.

Scanned with CamScanner

# சீசெல்சு தீவில் தமிழர்கள்.

ஆங்கிலத்தில்: கே. சச்சிதானந்தன், சீசெல்சு. தமிழில் : 'ஆலன்'

## 1. முந்தை வரலாறு:

நினைவிற்கெட்டாத காலம் முதலே தமிழர் **சீசெல்சை** அறிந்திருந்தனர். பல நூற்றாண்டுகளாக இந்தியப் பெருங்கடற்பகுதியின் வணிக மேலாண்மையாளர்களாக விளங்கியவர்கள் தமிழர்கள், அரேபியர்கள், சீனர்கள், பாரசீகர்கள் மற்றும் மலாய் நாட்டினர் ஆவர். ஆசிய ஆப்பிரிக்கக் கடலோர மாநிலங்களுக்கிடையேயான வணிகத்துக்குப் பொறுப்பாளிகளாக இருந்தவர்கள் இவர்களே.

'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்னும் தமிழ்ப் பழமொழி, தமிழ் நாட்டினர் கடல்கடந்து மேற்கொண்ட துணிச்சல் மிக்க வணிக முயற்சியைக் குறிக்கிறது. நெடுங்காலத்துக்கு முன்பே சீசெல்சுக்கு வந்த தமிழர்கள் திருவோடு (கோகோ டி மெர்)களைத் தொகுத்தனர்.

16ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கீசியர்கள் இத் தீவுகளைக் கண்டு குடியேறினர் என்பர். ஆனால் **'சில்லவுட்'** தீவுகளில் அண்மையில் துடைத்துப் பார்க்கப்பட்ட அரபியக் கல்லறைச் செய்திகள், போர்த்துக்கீசியருக்கு முன்பே ஆசியர் அங்கு இருந்தமைக்குச் சான்று பகர்கின்றன. அப் பகுதியில் தமிழர் செல்லாளுமை நீண்ட காலம் இருந்ததற்கு **'அல்டாப்ரா'** தீவுக் கூட்டத்துள் ஒரு தீவு **'மலபார் தீவு'** எனப் பெயர் பெற்றிருப்பதே தக்க சான்றாகும்.

15, 16 ஆம் நூற்றாண்டுகளில் குடியேற்ற நினைவோடு வந்த ஐரோப்பிய அரசியல் சார் வணிகக் கப்பலோட்டிகளை, ஓமன், மலபார், மலேயா நாடுகளைச் சேர்ந்த கப்பல் கொள்ளையர்கள் அச்சுறுத்தி வந்துள்ளதாக அடிக்கடி சொல்லப்பட்டு வருகிறது. போர்த்துக்கீசியர்க்கும் டச்சுக்காரர்க்கும் சொந்தமான சரக்குக் கப்பல்களை அவர்கள் ஒளிந்திருந்து தாக்கிக் கொள்ளையடித்தனர் என்றும் கூறப்பெற்றது.

மலபார்க் கரைப் பகுதியில் இருந்த முன்னணிக் கப்பல் கொள்ளைக் காரர் **குஞ்சலி**; அவர் போர்த்துக்கீசிய, டச்சுச்சரக்குக் கப்பல்களைத் தேடி இந்தியப் பெருங்கடலில் குறுக்கும் நெடுக்குமாகத் திரிந்தவர்; அவர் ஒரு தமிழர் (அல்லது மலமாரி), படைக்கலங்கள் நிறைந்த சிறு கப்பல தொகுதியை வைத்துக் கொண்டு, போர்த்துக்கீசிய டச்சுக் காரரிடமிருந்து தமிழ்வணிகர்களைக் காத்து வந்தவர். இதற்காக அவருக்குத் தென்னிந்திய நாயக்க மன்னர்களும் திருவாங்கூர் மன்னர்களும் இலங்கை யாழ்ப்பாணம், கண்டி மன்னர்களும் ஊதியம் அளித்தனர். **'லிசுபனி'**லிருந்த ஆயப்பதிவேடுகள் தற்செயலாக எரிந்து போகாமல் இருந்திருந்தால், குஞ்சலி மற்றும் அவரது ஆட்களின் துணிவும் போர்த்திறனும் நம் எல்லார்க்கும் நன்கு தெரிய வந்திருக்கும். குஞ்சலி தம் ஆட்களுடன் வந்து தங்கி, சீசெல்சு தீவை மறைந்திருந்து தாக்கும் தளமாகப் பயன்படுத்தினர் என்பது நம் கருத்தாகும். தென்னிந்தியாவிலும் இலங்கையிலுமிருந்த மன்னர்களுக்கு அவர் திருவோடு (கோகோ டி மெர்)களை எடுத்துச் சென்று கொடுத்தார்.

## 2. அண்மை வரலாறு:

லிகோர் (Lecore) என்ற கப்பல் தலைவனுடன், தெல்மாக் டி. செயிண்ட் மாலோ என்ற கப்பலில் 1770 ஆகத்து 17இல் மொரீசியசிலிருந்து சீசெல்சுக்குச் சென்றவர்களே, சீசெல்சில் முதலில் குடியேறியவர்கள் என அண்மைக்காலப் பதிவுகள் கூறுகின்றன. அவர்கள் 15 வெள்ளையர்கள், 7 அடிமைகள், உரிமைபெற்ற தொழிலாளர்களாக 5 தமிழர்கள், 1 நீக்ரோ ஆக 28 பேர் ஆவர். இவர்கள் அங்குக் குடியேறக் காரணம் மொரீசியசுக்கும் பாண்டிச்சேரிக்கும் இடையே சென்றுவந்த பிரெஞ்சுக் கப்பல்களுக்கு ஓர் அழைப்புத் துறைமுகம் (Port of call) அமைப்பதே. அதன் பின் தமிழர்கள் சீசெல்சில் தொடர்ந்து குடியேறினர்.

சீசெல்சில் முதல் பொருளியற் செயற்பாடு மரங்களை வெட்டி ஏற்றுமதி செய்வதை நடுவாகக் கொண்டிருந்தது. பிரெஞ்சின் படகுக் கட்டுத்துறை இருந்த பாண்டிச் சேரித் துறைமுகத்துக்கு அங்கிருந்து மரங்கள் அனுப்பப்பட்டன. ஒரு முறை பாண்டிச் சேரிக்குச் செல்ல 13 நாள்களாயின. மரவணிகத்தின் பொருட்டுப், பாண்டிச்சேரிக்கும் சீசெல்சுக்கு மிடையே சனவரி முதல் செப்டம்பர் வரையுள்ள மாதங்களில் 15 முதல் 20 கப்பல் போக்குவரத்துகள் நிகழ்ந்தன.

செழிப்பும் வளப்பமும் மிக்க காவிரிக் கழிமுகப் பகுதியிலும் அதைச் சுற்றியும் வாழ்ந்த தமிழர்கள், மளிகைச் சரக்குகள், பிற நுகர்பொருள்கள், துணிகள் ஆகியவற்றுடன் தமிழ் நாட்டிலிருந்து சீசெல்சுக்குச் சென்றனர். அவர்களுள் பலர் அங்கு மேலும் ஒரு திருமணம் செய்து கொண்டு குழந்தைகளைப் பெற்றனர். 1795 முதல் 1980 வரை சீசெல்சில் பதிவான ஏறத்தாழ 20,000 திருமணங்களில் 800 தமிழ்ப் பெயர்களைக் கொண்டுள்ளன. 1795—1845 இல் தமிழ்ப் பெயர்களோடு கூடிய திருமணங்கள் 2 விழுக்காடு உயர்ந்திருந்தன; அவை 1930 — 1980 இல் 5 விழுக்காடாக ஆகியிருந்தன.

Scanned with CamScanner

நாடோடி வீர வாழ்வினராக, திறம்பெற்ற கைவிணைஞர்களாக, வணிகர்களாக, சில நேரங்களில் ஆளுநர்களின் கருத்துரைஞர்களாக, மொரிசியசிலிருப்பதும் இறியூனியனிலிருந்தும் தமிழர்கள் சீசெல்சுக்கு வந்தனர். 1789 வாக்கில் இறியூனியனிலிருந்து வந்த **திரு. இராமலிங்கம்** அவர்களுள் ஒருவர். அப்போதிருந்த சீசெல்சு ஆளுநரின் நன்மதிப்பையும் பாராட்டினையும் பெற்று அவரின் கருத்துரையாளர்களுள் ஒருவரானார் அவர். சீசெல்சில் குடியமர்ந்தவர்களுக்கு வழக்கமாக வழங்கப்பட்ட நிலங்களைப் போல் மூன்று நான்கு மடங்கு நிலங்களை திரு. இராமலிங்கத்துக்கும் அவரின் உடன்பிறந்தார் மக்களுக்கும் ஒதுக்கீடு செய்திடச் சிறப்பு உத்தரவிட்டார் ஆளுநர்.

### 3. தமிழரின் பங்களிப்பு:

சீசெல்சில் கிரியோல் மொழி, பண்பாட்டு மலர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் தமிழர்கள் பெரிதும் துணைபுரிந்தனர். தமிழில் இருந்து தோன்றிய பல சொற்கள் கிரியோல் மொழியில் காணப்பெறுகின்றன. எடுத்துக் காட்டாகச் சில: கருப்பிலே (கருவேப்பிலை), பூசுனிக்கா (பூசனிக்காய்), முரிங்கா (முருங்கைக் காய்), மா (மாங்காய்), ஆமா (ஆம்). சீசெல்சுவாழ் மக்களின் பழக்கவழக்கங்களும் நடத்தைக் கோலங்களும் பெரிதும் தமிழர் ஆளுமைக்குட் பட்டிருந்தன.

1864 இல் **திரு. நாயக்கன்** சீசெல்சில் வணிகம் தொடங்கினார். பெரும் செல்வம் ஈட்டிய அவர், **விக்டோரியா** நகரத்தின் பெரும்பகுதி நிலத்துக்குச் சொந்தக்காரரானார். இன்றுங் கூடச் சீசெல்சு மக்கள் பலர் **திரு நாயக்கன்** குடும்பத்தைத் தங்கள் வணிக முன்னோடியாகக் கருதுகின்றனர்.

1874 இல் **திரு. கந்தசாமிசெட்டி** வணிகம் தொடங்கினார். சீசெல்சில் **செட்டி** என்பது ஒரு பொதுப் பெயராக இருக்கிறது. வாழ்வின் எல்லாத் துறைகளிலும் அவர்கள் மிகவும் சுறுசுறுப்பாக இயங்குகின்றனர்.

1875 வாக்கில் **திரு. பிள்ளை** தம் வணிகத்தைத் தொடங்கினார். அவரைத் தொடர்ந்து தமிழ்நாட்டிலுள்ள மயிலாடுதுறை—சிதம்பரம் நகரியங்களிலிருந்து பலரும் சென்று வணிகம் தொடங்கினர். சீசெல்சில் பிள்ளைகளுக்குச் சொந்தமான ஒவ்வொரு சில்லரைக் கடைக்கும் கூட இன்று 'பிள்ளை' என்பது வணிகவழி (குடும்ப) உரிமைப் பெயராக இருக்கிறது.

இன்று, சீசெல்சு மக்கள் தொகையில் ஏறத்தாழ 5 விழுக்காட்டினர் தமிழினத்தவர். மக்கள் தொகையில் போதிய அளவு தமிழ்மரபினர் உள்ளனர். 1901 இல் மக்கள் தொகை 19,237 இல் 332 பேர் தமிழ் இந்துக்களாக(?) இருந்தனர். இக் காலத்தில் தமிழர் மரபினரில் மிகப் பலர் கிறித்தவர்களாக மாற்றப்பட்டுள்ளதை மறைக்க முடியாது. 1971-இல் பன்னாட்டு வானூர்தி நிலையம் அமைக்கப்பட்டதால் தமிழர் பலர்க்குத் தமிழ்நாட்டுடன் நெருங்கிய தொடர்புகொள்ள வாய்ப்பு ஏற்பட்டது. தமிழ்நாட்டுடன் திருமணத் தொடர்பு கொள்வது இக் காலத்தில் பரவலான வழக்கமாகியுள்ளது. கடந்த 15 ஆண்டுகளில் சீசெல்சில் வந்து தங்கும் தமிழ்ப் பெண்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது.

### 4. தமிழ் இன உறுதிப்பாடு (Identity).

சீசெல்சு தேசிய ஒருமைப்பாட்டிலும் அதன் வளர்ச்சியிலும் தமிழர்கள் விரும்பிப் பங்கேற்றனர். எனினும் சிலவாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய தம் பண்பாட்டு மரபின உரிமைசால் பெருமையுடன் காத்து வருகின்றனர். சீசெல்சில் தமிழர்களின் இன உறுதிப்பாடு, பண்பாடு, வாழ்வியல் முறைகள் இவற்றின் நிலைப்பாட்டு முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப் பெற்று வருகின்றன. அவையாவன:

—சீசெல்சில் ஒரு கோவில் கட்டுதல். உரிய இடத்திற்கெனத் தொகைகள் தண்டப்பெற்றுள்ளன. ஒரு கோவில் அமைத்துப் பேணுவதற்கான பொருளுதவி மற்றும் பிற உதவிகளை அளிப்பதற்குத் 'திருப்பதி தேவநிலையம்' (தேவத்தானம்) தற்காலிக ஒப்புதல் அளித்துள்ளது.

—சீசெல்சு 'இந்துக் கோவில் சங்க' வளாகத்தில் தொடர்ந்து வழிபாடுகள், கூட்டங்கள், மத விழாக்கள் நடத்தப் பெற்று வருகின்றன.

—ஞாயிற்றுக் கிழமைகளில் குழந்தைகளுக்கெனத் தமிழ் வகுப்புகள் நடத்தப் பெறுகின்றன.

—கோலாட்டம், கும்மி போன்ற தமிழ் நடனங்கள் ஊக்குவிக்கப் பட்டு வருகின்றன. சீசெல்சு வானொலித் தொலைகாட்சி தமிழ்ப் பெண்களின் கும்மி கோலாட்டங்களைப் பரப்புவது வழக்கமாகியுள்ளது.

—சமயம் மற்றும் பிறவற்றைப் பற்றிய கதைப் பாடல் நிகழ்ச்சி (கதா காலட்சேபம்)கள் தொடர்ந்து நிகழ்த்தப் பெறுகின்றன.

—தமிழரின் சிறப்பு நடனக்கலையான பரத நாட்டியத்தில் வல்லவர் ஒருவரை நிகழ்ச்சிகள் நடத்துவதற்காக 'சீசெல்சு இந்துக் கோவில் சங்கம்' வரவழைத்துள்ளது.

---

**இந்தியாவை ஆளுகின்ற இனம், தமிழினத்தையும் பிற தேசிய இனங்களையும் அடக்கி ஒடுக்கப் பார்க்கின்றது. அதன் அரசியல் ஆளுமை தவிர்க்கப் பெறுதலே, இன்றைய நம் கடமை, முயற்சி!**

---

உங்களுக்குத் தெரியுமா?

# அழகூட்டும் பொருள்கள் எவற்றிலிருந்து செய்யப் பெறுகின்றன?

தான் அழகாகத் தோற்றமளிக்க வேண்டும் என்றே ஒவ்வொரு பெண்ணும் விரும்புகின்றாள். இது பெண்களின் இயற்கையான பண்பு. ஆனால் மேலை நாட்டுப் பெண்களும், மேற்கத்திய மயமான கிழைத் தேயப் பெண்களும் வகை வகையான புனைவுப் (சிங்காரிப்புப்) பொருள்களைப் பயன் படுத்தித் தமது அழகைப் பிறர்க்குக் காட்டிக் கொள்ளப்பகீரத முயற்சி (பிரயத்தனம்) செய்கின்றனர். இதனால் அவர்கள் எதிர் நோக்கும் சிக்கல்களும் துயரங்களும் எண்ணிலடங்கா.

இன்றைய நாகரிக உலகு, அக அழகைவிடப் புற அழகிலேயே அதிக நாட்டம் செலுத்துகின்றது. அதற்காக எத்தனையோ வகையான கருவிகளும் வழி வகைகளும், அழகுப் பொருள்களும் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. பல பெரிய குழுமங்கள் அழகுப் பொருள்களை உருவாக்கம் செய்து அளவற்ற ஊதியம் ஈட்டுகின்றன. அழகுக் கருவிப் பொருள்களின் உருவாக்கத்திற்கு உலகிலேயே பெயர் பெற்ற நாடாக விளங்குகிறது பிரான்சு.

முகம், கூந்தல் என்பன மங்கையரின் கவடித்தலில் (அலங்காரத்தில்) தலையாய இடம் பெறுகின்றன. இவற்றை அழகுபடுத்துவதற்காகப் பல வகையான பூசுகுழை (கிறீம்)களும், மணநெய் (ஆயின்மெண்ட்)களும் குழல்கழுவி (ஹேர்லோசன்) (hair lotion) எனப்படும் பூச்சுகளும் நடைமுறையில் இருக்கின்றன.

இவ்வகையான அழகுப் பொருள்கள் எவற்றைக் கொண்டு செய்யப்படுகின்றன என்பதைப் பற்றிக் கவலையோடு சிந்தித்துப் பார்ப்போர் வெகு சிலரே!

கருச்சிதைவு செய்யப்படும். குழவிகள் அழகுப் பொருள்களின் உருவாக்கத்திற்குப் பயன் படுத்தப் படுகின்றன என்ற உண்மை பலருக்கு அதிர்ச்சியையும், திடுக்கத்தையும் ஏற்படுத்தக்கூடும்.

அது மட்டுமா....?

மகப் பேற்றை உடனடுத்து அகற்றப்படுகின்ற Placenta எனப்படும் கருப்பப் பையின் அகவுறையில் இருந்தும் அழகுப் பொருள்கள் உருவாக்கம் செய்யப்படுகின்றன. இத் தகவலை மலேசியாவில் இருந்து வெளிவரும் 'உத்துசான் கன்சியூமர்' என்ற பினுங் நுகர்வோர் கழகத்தின் மாத இதழ் (மார்ச் 86) எடுத்துக் காட்டியிருக்கின்றது.

அழகுப் பொருள்களைச் செய்வதற்குத் தேவையான மாந்தக் கருக்களையும், பிளசண்டா போன்ற பொருள்களையும் ,மருத்துவமனைகளும் மருத்துவ நிலையங்களும் தொழிற் சாலைகளுக்கு வழங்குகின்றன. இது ஒரு பெரிய வணிகமாகவே கொண்டு நடத்தப்படுகிறது. இத்தொழில் முயற்சிக்குத் துணையாக இருப்பது மேற்குலக நாகரிகத்தின் அடிப்படைகளும், அதனடியாக வளர்ந்த ஒழுக்க விழ்ச்சியும், கருச்சிதைவை ஆதரிக்கும் சட்டங்களுமாகும்.

### கருச்சிதைவுகள்

1973-இல் அமெரிக்க உயர் நெறி மன்றம் கருச் சிதைவைச் சட்ட முழுமையாக ஏற்றிசைந்தது. இதனைத் தொடர்ந்து ஆண்டுதோறும் 1.5 மில்லியன் (பதினைந்து இலக்கம்) கருச் சிதைவுகள் இங்கு நடைபெறுகின்றன. கடந்த 12 ஆண்டுக் காலத்தில் 18 இலக்கம் மாந்த உயிர்கள் இம் முறையால் பறிக்கப்பட்டுள்ளன. நாளொன்றுக்கு 4000 உயிர்கள் அழிக்கப்படுகின்றன. இதனை விட மேலும் 1.5 இலக்கம் கருச்சிதைவுகள் வீடுகளில் பெண்களால் தாமாகவே செய்து கொள்ளப்படுகின்றன. இந்தப் புள்ளி விளக்கங்களைக் கனடாவில் இருந்து வெளிவரும் 'கிரசண்ட்' என்ற தாளிகை குறிப்பிட்டிருக்கிறது.

கிழை நாடுகளிலும் கருச்சிதைவு அதிகரித்து வருவதாகத் தோன்றுகிறது. 1984-இல் சிங்கப்பூரில் நாளொன்றுக்குச் சராசரியாக 50 விழுக்காடு (19,000)கருச்சிதைவுகள் செய்யப் பட்டுள்ளன. குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் ஒரு பகுதியாக 1974-இல் அரசு கருச்சிதைவைச் சட்ட முழுமையாக ஆக்கியதில் இருந்து இது மும்மடங்கான அதிகரிப்பாகும் என்று மேற் கூறிய மலேசியத் தாளிகை தெரிவிக்கிறது.

'இகாரசு' எனும் தாளிகையை மேற்கோள் காட்டி அண்மையில் 'தினகரன்' (இலங்கை) செய்தித்தாள் பின்வருமாறு செய்தி வெளியிட்டிருந்தது.

''மாந்தக் கருக்களில் இருந்து எடுக்கப்படும் 'ஹெலி கிறிசம்' என்னும் பெயருள்ள கிறீம் விளம்பரம் ஒன்று 1984, மே மாதம் 9-ஆம் பக்கல் பிரஞ்சு செய்தித் தாளிகை ஒன்றில் வெளியிடப் பட்டதாக 'இகாரசு' தெரிவித்துள்ளது.

''இந்தக் கருக் கடத்தலில் பல நாடுகள் தொடர்புள்ளதாக அத் தாளிகை மேலும் தெரிவித்துள்ளது. ஆசுதிரியாவில் கிளையொன்றைக் கொண்டுள்ள அமெரிக்க நிறுவனமொன்று தென் கொரியாவில் இருந்து ஆயிரக் கணக்கான கருக்களை வாங்கியதாகவும், 433, குடுவைகளில் மிகவும் உறைந்த நிலையில் இவை சப்பானிய விமான

Scanned with CamScanner

மூலம் 1974 நவம்பருக்கும் 1976 சூலைக்கும் இடையில் கொண்டு வரப்பட்டதாகவும் அத் தாளிகை தெரிவித்துள்ளது.''

1981-இல் சுவிட்சர்லாந்து-பிரான்சு எல்லைப் புறக் காவலர்கள் உறை நிலையில் வைக்கப்பட்ட மாந்தக் கருக்கள் (Human foetuses) ஏற்றப்பட்ட ஓர் இழுவண்டி நடு ஐரோப்பாவில் இருந்து வருவதைக் கண்டு கொண்டனர். அவை பிரான்சிலுள்ள அழகுப் பொருள் தொழில் நிலையங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டுக் கொண்டிருந்தன.

இந்த விளக்கத்தை Gazette dupalais என்னும் புகழ் பெற்ற சட்டச் சார்பான தாளிகை எழுதியிருந்தது. ''பிரான்சில் உயர்ந்த விலைகளில் விற்கப்படுகின்ற, தோலுக்குப் புத்துயிர்ப்பூட்டப் பயன்படும். அழகுப் பொருள்களுக்காக'' மாந்தக் கருக்கள் சுறுசுறுப்பான வணிகம் நடைபெறுவதாக அத்தாளிகை மேலும் விளக்கியிருந்தது.

அண்மையில் கலிபோர்னியாவின் முன்னாள் மருத்துவ ஆய்வுக்கூட அறுவை மருத்துவர் ஒருவரின்வீட்டில் வைத்து 17,000 மாந்தக் கருக்கள் கண்டுபிடிக்கப்பட்டன. (கிரசண்ட்)

இவ்வாறு அழகு உருவாக்கப் பொருள் உருவாக்க நிலையங்களுக்காக மாந்தக் கருக்கள் திரட்டப்படுவதற்கு நிறைய அடிப்படைகள் கிடைக்கின்றன.

மாந்தக் கருக்களைவிட வேறு பல அருவருப்பான பொருள்கள் புனைவுப் பொருள்கள் செய்வதற்குப் பயன்படுகின்றன. அவற்றுள் Placenta, Collagen, Amniotic Fluid என்பன குறிப்பிடத்தக்கவையாகும்.

1982 இல் பினங் நுகர்வோர் கழகம் மலேசிய மருத்துவமனைகள் அழகுப் பொருள்கள் செய்யும் குழுமங்களுக்கு பிளசண்டாவை (நச்சுக் கொடியோடு கூடிய கர்ப்பப்பையின் உள்ளுறை) விற்பனை செய்யும் இழிந்த வணிகத்தை அம்பலப்படுத்தியது.

பிளசண்டாவில் இருந்து பெறப்பட்ட பொருள்கள் அடங்கிருப்பதாகத் தெரியவந்துள்ள, அழகுப் பொருள்கள் உடல், முகப் பூச்சுக்குழை மணநெய்கள் குழல் வளர் பொருள்கள் என்பனவாகும்.

இனப் பெருக்க உறுப்புகளில் குழப்ப நிலைகள், பெண்களுக்குரிய பாலுணர்வுப் பண்புகளின் மிகையான வளர்ச்சி என்பன இவ்வாறான பொருள்களைப் பயன்படுத்துவோருக்கு உண்டாகக் கூடிய தலையாய பக்க விளைவுகளாகும்.

சில அழகுப் பொருள்களில் பயன்படுத்தப்படும் மற்றோர் அருவருப்பான பொருள் (கருப்பத்தில் இருக்கின்ற) பிறக்காத குழந்தையைச் சூழவுள்ள சூல் பையில் காணப்படுகின்ற நீர்மமாகும். இதுவே Amniotic Fluid எனக் கூறப்படுகின்றது. முகப் பூச்சுகள், முடிகழுவி, வழலைகள் போன்ற தமது உருவாக்கப் பொருள்கள், இம் மூலப் பொருள்களைக் கொண்டிருப்பதாகக் கூறிடும் அழகுப் பொருள் உருவாக்குபவர்கள் இது பற்றிப் பின்வருமாறு விளம்பரம் செய்திருக்கின்றனர்.

''Nature's Own First Medium of Life.

மாந்த—அல்லது விலங்குப் பொருள்களைக் கொண்டிராத அழகுப் பொருள்களை வாங்க விரும்புவோர், அவற்றை வாங்கும் முன்னர் முகவரித்தாள்களைக் கவனமாகப் படிக்க வேண்டும். Placenta, Collagen, Amniotic Fluid என்பவற்றைக் கொண்டிருப்பதாக முகப்பட்டி(லேபிள்)களில் காட்டப்பட்டிருந்தால் அவற்றைக் கண்டிப்பாக வாங்கக் கூடாது.

எனினும் விலக்கப்பட்ட அப்பொருள்களைக் கொண்டிருக்கின்ற, ஆனால் முகப்பட்டி (லேபிள்)-களில் அதனைப் பொறிக்காத எத்தனையோ பொருள்கள் இருக்கத்தான் செய்கின்றன.

நன்றி: 'இசுலாமியச் சிந்தனை'
'சமரசம்' சூலை 87.

---

(5-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கோருகின்றார்கள். இரும்புச் சார உப்பு தந்து எங்கள் 'சோகை' நோயைத் தீர்த்திட உதவுங்கள் என்கிறார்கள் மக்கள். ''எங்களைக் காட்டித் திட்டத்தைத் தீட்டி, ஊதியம் கருதி வெளிநாட்டுக்கு விலையாக்கி விடாதீர்கள்: எங்களை 'இழக்க' அரசு எப்போதும் அணியமாகி விடும்: ஊதியத்தை மட்டும் விட்டுவிடாது,'' என்று மக்கள் நினைப்பதை உறுதி செய்து விடாதீர்கள்!

O தமிழ்நாட்டில் தடம்புரளும் பேருந்துகள், அரசியல் கட்சிகள், ஏதங்கள், மோதல்கள் பற்றிய செய்திகள், கொள்ளையடிப்பு நிகழ்ச்சிகள் காணப்படுகின்றன; அதிகமாகி வருகின்றன! மக்களுக்கு வாழும் நம்பிக்கை ஊட்டும் நிகழ்ச்சிகள் குறைவே!

O காவிரி நீர்ச் சிக்கலைப் புதிய கேரள ஆட்சியாளர் தீர்க்க உதவுவர் என்ற நம்பிக்கையைப் பரப்புகின்றனர். விரைவில் முடிவுகாண நடுவண் அரசு முனையும் என்று கூறுகின்றனர். சாகும் முன்பு பால் ஊற்றுவிட்டாலும் நீர் ஊற்றி விடுவார்கள்!

O 'தேசம்' என்ற செய்தியைத் தரும்போது, இந்தியன் எக்சுபிரசு, புதுதில்லித் தலைப்பிலேயே தருகிறது. உண்மையில் 'புதுதில்லி'தான் இந்தியாவா? அது பன்னாட்டுக்கும் படைவீடன்றோ?

—பறம்பை அறிவன்

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறை கூறித் திறனாய்வு செய்வாரும் வீரமற்ற கோழைகளாகவும், எதிரிகளாகவுமே இருக்க முடி-யும். இவ் வுண்மைகளை உணர்ந்து கொண்டு, தமிழீழத்தில் நடந்து வரும் விடுதலைப் போராட்-டங்களை மதிப்பிடுவோர், நம் தமிழீழ விடுதலைப் போராளிகள் எவரையும், (அவர்கள் எந்தச் சிறிய, பெரிய, இயக்கத்தைச் சார்ந்தவராக இருந்தாலும்) இவர்களைக் குறைவாகக் கருதி விட முடியாது. அவ்வாறு குறை கூறுவார் பற்றி உண்மையான போராளிகள் கவலைப் பட மாட்டார்கள். இஃது ஒரு புறம் இருக்கட்டும்.

நாம் இங்குக் கூற வந்தது, இத்தகைய அருமையும் பெருமையும் வீரமும் முயற்சியும் ஊக்கமும் செறிந்து விளங்கிய தமிழீழப் போராட்ட இயக்கங்களை, அரசியல் சூழ்ச்சியாலும், ஆட்சிவெறியாலும், மாந்தத் தன்மையற்ற — இரக்க மற்ற—தன்மையாலும், அச்சுறுத்தி அடக்கி ஒடுக்கி அடிபணிய வைத்து விட்டனரே, ஊழல் மன்னன் இராசீவ் காந்தியும், உலகின் தலையாய கொடுமை விலங்கன் செயவர்த்தனனும், என்று எண்ணுகையில் உள்ளம் பதறுகிறது; உயிர் கருகுகிறது; உடல் வெலவெலக்கிறது!

இவர்களின் அப்பன் வீட்டுச் சொத்துகளையா விடுதலைப் போராளிகள் வேண்டும் என்று கேட்-கின்றனர்? உலக நிலப் பரப்பில் இவர்கள் மேய்-கின்ற நிலங்களுக்கு இவர்கள் எப்படி உரிமை கொண்டாடுகின்றனரோ, அப்படியே, தமிழர்கள் வாழ்கின்ற நிலங்களுக்கு அவர்கள் உரிமை கொண்டாடுகின்றனர். மூக்குள்ள உயிர்களெல்லாம் அது அதற்கு முடிந்த அளவில் உலகப் பொதுக் காற்றை உறிஞ்சிக் கொள்ள வேண்டியது தானே! இதில் இவர்களுக்கு என்ன நோப்பாளம் வந்துவிட்டது? உயிர்களின் இனநல உரிமையைத் தடுப்பதற்கு இவர்கள் யார்? கைகளில் படை பட்டாளங்களை வைத்திருப்பாதாலேயே இவர்கள் மாந்த உரிமைக்கு எல்லை வகுத்து, இறைமையை வரையறுத்து விடுவதா? கொடுமை கொடுமை! மிகவும் கொடுமை!

ஆனால், இவர்களின் கொடுமையை விட மிக மிகக் கொடிய கொடுமையாகும், இப் போராளிகள் நடந்து கொண்ட கொடுமை! இவர்கள் நடந்து கொள்ள வேண்டிய முறையில் நடந்து கொள்ளாததுதான் அனைத்துக் கொடுமையிலும் கொடுமை ஆகும். போராடும் பொழுதுகளில்தாம் இவர்கள் ஒருங்கிணைந்து போராடவில்லை எத்தனையோ சொன்னோம். எவருமே செவிகளில் போட்டுக் கொள்ள வில்லை! போனால் போகட்டும். அது போராளிகளின் இயல்புகளில் ஒருவகை என்று கூட அமைவு கொண்டோம். ஆனால் எதிரிகளுக்கு அடி பணியும் போது கூட ஒற்றுமை இல்லையே! ஒருவர் கைமேல் விழுந்தால் இன்னொருவர் கால்மேல் விழுகின்றார்! அடுத்தவர் நெடுஞ்சாண் கிடையாக நீட்டி விழுகிறார்! இஃதென்ன இழிவு! அந்நிலை எதிரிகளுக் கன்றோ ஊதியமாகித் தலைக் கிறக்கத்தைக் கொடுத்தது.

இறுதியிலாகிலும் இவர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து **'அனைவருமே போராடிச் சாவோமே யன்றி அடிபணிய மாட்டோம்'** என்று வீறு முழங்கியிருந்தால், இந்திரா காந்தி மகன் அனைவரையுமே சுட்டுப் பொசுக்கியிருப்பாரோ? அதைப் பார்த்துக் கொண்டு உலகத் தமிழர் அனைவருமே சும்மா இருந்து விடுவாரோ? 'சுட்ட நண்டுக்குச் சுடாத நண்டுகள் காவலிருந்து, நரிக்கு நாயனம் ஊதி நல் விருந்து தந்ததைப் போல' அழைக்கும் முன்பே, போராளிகளின் கோழைத்தனம், அடி-பணிய மறுத்த புலிகள் இயக்கத்தையுமன்றோ அடிப்படுத்தி விட்டது! இத் தமிழின வீழ்ச்சிக்கும் தாழ்ச்சிக்கும் இனி, எதைக் கொண்டு ஈடு கட்டுவது? பஃறுளியாற்றையும், குமரிக் கோட்டையும் கொடுங் கடலுக்குக் காவு கொடுத்த பாண்டியன், வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டானே, அந்த மரபு வழி வந்தோரா இற்றைத் தமிழர்? ஐயகோ! நெஞ்சு பற்றியெரிகிறதே!

'பிரிந்து கிடந்தால் சாவிலும். தனித்தனிப் பிணமாகத்தான், எரிந்து கருக வேண்டும்' என்-புதை இனியேனும், எண்ணிப் பார்த்து, இழந்த தமிழின உரிமையை மீட்கப் புறப்படும் தமிழ்ப் போராளிகள் ஒன்று சேர்ந்து இயங்க வேண்டும் என்பதே அவர்கள் முன் வைக்கும் நம் எதிர்கால வேண்டுகோளாகும்! இழந்ததற்கு வருந்தாமல் எதிர்வதற்குத் துணிவு கொள்வோம்.

கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையில் பீடுடைய தில்!

---

## ஊழே! ஊழே!

*தமிழர் என்பவர் எங்குவாழ்ந் திடினும்*
*தமிழ்மொழிப் பற்றோ தமிழினப் பற்றோ*
*கொஞ்சமும் இல்லாக் கூட்டத் தினராய்*
*அஞ்சி அஞ்சியே பிறவினத் தாரின்*
*ஏவல் கேட்கும் எடுபிடி ஆட்களாய்,*
*தாவும் விலங்கினும் தாழ்ந்துள் ளனரே!*
*நயன்மை இன்றியே ஒருவர்க் கொருவர்*
*உயர்வு தாழ்வெனப் பேசித் திரிதல்,*
*இசைபட வாழா(து) ஒருவர்மேல் ஒருவர்*
*வசையெனும் சேற்றை வாரி இறைத்தல்,*
*போட்டி பூசலால் ஒருவரை ஒருவர்*
*காட்டிக் கொடுத்தல் காலை வாருதல்,*
*பண்பிழந் தவராய் ஒருவரோ டொருவர்*
*சண்டையிட் டழிதல் சாய்ந்து மடிதல்,*
*என்றிவை தாமே தமிழ ரிடையினில்*
*இன்று மிகவாய் இருத்தலைக் காண்கிறோம்!*
*ஊழே! ஊழே! தமிழினந் தன்னைப்*
*பாழே செய்யப் புகுந்துவிட் டனையோ!*

—தமிழவேள்—

# நூல் நலம்:

நூல் : நாங்கள் நாத்திகரானோம்.

(நாத்திகமேதை **கோரா**வின் தன் வரலாறு.)

ஆசிரியர் : **கோரா** (ஆங்கிலத்தில்) தமிழாக்கம்: **கலசம்.**

வெளியீடு: **புதுவாழ்வுப் பதிப்பகம்.**
23, நான்காவது முதன்மைச் சாலை
கசுத்தூரிபாய் நகர், அடையாறு,
சென்னை - 600 020.

118+24 பக்கங்கள்; விலை: உருபா- 18.

அறிவு! இதைப் பற்றிப் பேசுவோர் மிகப் பலர்; எழுதுவோர் பலர்; ஆய்வோர் சிலர்; ஆனால் நம்புவோர் மிகச் சிலர்; நம்பி நடப்பவரோ எங்கோ ஒருவர் அல்லது இருவர்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ மாந்தனுக்கு வாய்த்த ஒரே துணை அறிவே. அவ் வறிவினையே முழுதும் நம்பிக் குன்றா ஊக்கத்துடன் தம் வாழ்வின் செயற்பாடுகள் அனைத்தையும் மேற்கொள்வோரே செயற்கரிய செய்து இவ் வுலகினைத் தக்காங்கு நடத்தும் தகைசால் பெரியர் ஆவர்.

தம்மை வழிநடத்தும் அறிவுச் சுடரின் மீது ஒருவர் எந்த அளவுக்கு ஐயக் கருநிழலை வீழ்த்துகின்றாரோ, அந்த அளவுக்கு அவரது வாழ்வின் முழுமையில் குறைபாடுகள் நிகழ்கின்றன. அத்தகைய குறைபாடுகள் நிகழாமல் வாழ்ந்து காட்டிய மீமிசை மாந்தர் ஆந்திர நாட்டுப் பேரறிஞர் **கோரா** அவர்கள். அவரது தன்வரலாற்று நூலே "நாங்கள் நாத்திகரானோம்" என்னும் இந் நூல்.

பயனுள்ள வாழ்வுக்கான சிந்தனைகள் தம் உள்ளத்தில் தோன்றிய போது உடனுக்குடன் நடைமுறைக்குக் கொணர்ந்தவர்; வரபுவழி வாழ்வியல் முறைகளோடு கண்மூடித்தனமாக ஒன்றிச் செல்லாமல் ஏற்பன ஏற்றுப் பிறவற்றைப் புறந்தள்ளிக் காட்டிய துணிச்சல்காரர்; அதிர்வுற எதிர் வந்த தடைகளை அமைதியாக விலக்கி விட்டு, இடர்மிகு வாழ்க்கைப் பாதையில் இயல்பாக நடந்து காட்டியவர்; வாழ்வின் ஒவ்வொரு சிறு நிகழ்ச்சியிலும் தம் நம்பாமத(நாத்திக)ச் சிந்தனைக்கே முதலிடம் தந்து இறுதிவரை ஒரு சிறிதும் நெகிழாது உறுதியுடன் வாழ்ந்த உயரியர்; இவரே **கோரா.**

**அவர் மறைந்த பின்பும் மரபுவழி மதிக்கேடுகள் அவரது பிணத்தைக் கூட அண்டிட வில்லை.** ஆனால் அவர் காட்டிச் சென்ற நெறியில் ஒரு நல் வாழ்வு இயக்கம் தழைத்து வருகின்றது.

மாந்த உரிமை எத்தகையது? அதனை ஏன் போற்றிக் கொள்ள வேண்டும்? அதனைச் செயல் வடிவில் போற்றிப் பேணுவது எவ்வாறு?— இவை போலும் வினாக்களுக்கு மிகச் சரியான விடைகளை இந் நூலைக் கற்போர் உணர முடியும்.

அவரது மாந்தப் பண்பியல் செறிந்த மதிவழி வாழ்வின் மாண்பினை அறிவது நலிவுற்ற நெஞ்சினரையும் வலிவுற்ற செயலினராய் ஆக்கும்.

தம்மையும் தம் ஆற்றல்களையும் அறிந்து முற்போக்கு வாழ்வில் முனைந்து செல்லும் ஊக்கம் பெற விழைவோர் இந் நூலை நுனித்தறிதல் பயன் தருவதாகும்.

வெறும் அறிவியல் என்ற முதன்மைப் பாட்டினின்றும் நீங்கிக் குமுகாயத் தேவைகளுக்காக நம்பாமதம் (நாத்திகம்) பயன்பட வேண்டும் என்ற விளக்கமும், காந்தியடிகளின் மேலான மாந்தத் தன்மையும் அவருக்கு மாறாக நேரு, பிரசாத் போன்றோர் நாட்டைப் பாழ்படுத்திய வகையும் இன்றைய அரசியல்துறை ஆய்வாளர்கள் அறிந்து பயன்படுத்திக் கொள்ள வேண்டிய அரிய கருத்துகளாகும்.

ஆங்கிலத்தினின்று மொழிபெயர்க்கப் பெற்றது என்னும் உணர்வு தோன்றா வகையில் தெளிவாக— இயல்பாகத் தமிழ் நடையிடுகிறது இந் நூல். மிகவும் பாராட்டத் தகுந்த கன்னி முயற்சி.

எளிமையும் கவர்ச்சியும் அமைந்த அழகிய முதற்பதிப்பு இது.

தனித்தமிழ்ச் சொற்களே இடம் பெறுதல் வேண்டும் என்னும் இன்றியமையாமையினைச் சிந்தனையில் பதித்துக் கொண்டதாகக் குறிப்பிடும் மொழிபெயர்ப்பாளரின் தாய்மொழிக் காப்புணர்வு பாராட்டத் தக்கது. எனினும் குமுகாயம், மாந்தன் போன்று சில இடங்களில் மட்டுமே தனித்தமிழில் பயன்படுத்தி விட்டுப் பல இடங்களில் சமுதாயம், மனிதன் என்றே அயற்சொற்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன.

அன்றியும், ஏறத்தாழ 70 அயற்சொற்கள் ஒவ்வொன்றும் சில முறைகள் பயன்படுத்தப் பெற்றுள்ளன. (அவை: நாத்திகம், சுதந்தரம், அநேகம், ஏகபோகம், ஆன்மா, ஆன்மீகம், தத்துவம், நியாயம், இச்சை, கர்த்தா, நியமனம், காபி, சம்பிரதாயம், நிர்வாகம், விதி(த்தார்), மெட்ரோபாலிடன், சமரசம், பிரச்சாரம், சம்பந்தி, நூதனம், சிரமம், சோதித்து, சாராம்சம், சர்வோதயம், மோகம், ஏகாதிபத்தியம், கிராமம், காபந்து, சாதாரணம், வாதம், நிபந்தனை, சமூகம், சமதர்மம், சமத்துவம், சாதனை, தர்மகர்த்தா, சீர்திருத்து, சக, அலங்காரம், ஊதாரி, பிரதிநிதி, விதம், சகா, மவுனம், வாக்கு, நிர்வாகம், பிரச்சினை, முகாம்,

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

(11-ஆம் பக்கத் தொடர்ச்சி)

(ஆக்கப்)பூர்வம், பராமரித்து, சம்பாத்தியம், இலட்சியம், வாரிசு, அகிம்சை, வர்க்கம், சர்வாதிகாரம், விவாதம், அம்சம், '(ஆமாம்)சாமி,' மசோதா, பாதகம், அகதி, தகவல், சகாப்தம், நிந்தனை, விசா.)

சுட்டுச் சொல் தனிச் சொல்லாகப் பிரித்துப் பதிப்பிக்கப்பெற வேண்டும். எல்லா இடங்களிலும் சேர்த்தே பதிப்பிக்கப் பெற்றுள்ளன. (எ-டு: அப்பெண்--> அப் பெண், அம் மக்கள்.)

உயிர்முதற் சொற்களுக்கு முன் 'ஓர்' எனவருவதே சரி. 'ஒரு' என வரலாகாது.(எ-டு: ஒரு இயக்கம்--> ஓர் இயக்கம், ஒரு உறுப்பினர் --> ஓர் உறுப்பினர்)

ஒற்றுப் பிழைகள் ஆங்காங்கு காணப்பெறுகின்றன.

தொடர்ப்பிழைகளும் சில உண்டு. (எ-டு: அடிமைகள் அல்ல--> அடிமைகள் அல்லர்)

அச்சுப் பிழைகள் நூலின் பிற்பகுதியில் பலவாக உள்ளன.

அடுத்தடுத்த பதிப்புகளில் இவைபோலும் குறைபாடுகள் நீங்கும்; ஒரு தூய மாசற்ற முழுமை வாழ்வுப் பெரியாரின் தன் வரலாற்று நூலும் தூய பிழையற்ற முழுமைத் தன்மையும் அழகும் கொண்டதாக விளங்கும் என நம்புகின்றோம்.

பயன்சான்ற நூல்; அனைவரும் படித்துப் பயன்கொள்க!

—கல்லை. அருட்செல்வன்.

---

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

'தமிழ் நிலம்' இதழில் 'குமரித்' தந்தை நேசமணி நூல் பற்றி எழுதியிருந்தீர்கள். நூலில் குறைகள் ஏராளம் இருந்தும் மிகச் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளீர்கள். நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

கேரளம் இருமொழி மாநிலமாக இருக்கலாம் என்றும், தேவிகுளம், பீர்மேடு உட்பட்ட தமிழ்ப்பகுதிகள் ஒரே மாவட்டமாக இயங்க வேண்டும் என்றுந் தாம் முதற்கண் நேசமணி கோரிக்கையினை முன் வைத்துக் கொள்கை முழக்கம் செய்தார்கள். மலையாளிகள் அதனை ஏற்கவில்லை. எனவே தமிழகத்துடன் இணைவது தவிர வேறு வழியில்லை என்று போராடிப் பகுதி வெற்றி பெற்றனர்கள்.

தமிழர்'க்'கு உய்வு தருவது தென் மொழிக் கொள்கைதான் என்பதற்கு ஐயமில்லை. ஆனால் பெரும்பான்மை மக்களும் தமிழ் வரலாறு உணராது ஆரிய மாயையில் சிக்கி உள்ளனர். ஆரிய மாயையின் முகத்திரையினைக் கிழித்து மக்களுக்கு உரைத்திடத் 'தமிழ் நிலம்' பாடுபட வேண்டும். கடந்த இதழில் துக்ளக் சோவை படம் பிடித்துக் காட்டியுள்ளீர்கள். துக்ளக், தினமலர் போன்ற இதழ்கள் செய்யும் தமிழ்க் குறும்பு கொஞ்ச நஞ்சம் அல்ல. அவர்களின் கரவுச் செயல்களை உடனுக்குடன் தமிழர்கட்கு உணர்த்திடப் பாடுபட வேண்டும்.

—ஞான தோமா, இராமநாதபுரம்.

---

### உ.த.மு.க. வின் உயர்ந்த கொள்கைகள்!

1) தாய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

### சிந்தனைக்கு - 8

சாவானது திரண்ட ஆற்றலுடன் எதிரே வந்தாலும், வீரர் அனைவரும் ஒன்று கூடி எதிர்த்து நிற்கும் வீரமுடையதே படை!


(ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும்) இதழ் எண். 89 TN/MS (C) 657

அனுப்புதல்:
**தமிழ்நிலம்**
5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5
தொலைபேசி எண்: 847829

உறுப்பினர்:
ஆண்டுக் கட்டணம் உரு. 44-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 22-00

பெறுநர்: நூல் அஞ்சல்
திரு. / திருவாட்டி

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்.
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.